**C.O.S.No. 40/2019** **தேதி – 08.07.2025**

**வா.சா.1. – கார்த்திகேயன்**

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

1ம் பிரதிவாதி நிறுவனம் எஸ்.ஆர்.மேச் என்ற பெயரில் வழக்குரையில் காண்பிக்கப்பட்ட முகவரியில் தீப்பட்டி உற்பத்தி செய்கிறார்களா என்று எனக்கு தெரியாது. ஆனால் அலுவலகம் உள்ளது. மேற்படி நிறுவனம் எத்தனை அடி அளவில் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி அலுவலகத்திலேயே உற்பத்தி செய்யலாம். அந்த அலுவலகத்தை போய் நேரில் பார்த்தேனா என்றால் நான் பார்க்கவில்லை. அதை பார்க்கவும் முடியாது. 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு சரக்குகள் அனுப்பியதற்கு பில்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 ஆனது என் கம்பெனியில் இருந்து பலதரப்பட்ட நபர்களுக்கு சரக்குகள் அனுப்பியதற்கான பில்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.10–ஐ தவிர்த்து 1 முதல் 4 பிரதிவாதிகள், 5ம் பிரதிவாதிக்கு சரக்குகள் அனுப்பியதற்கு வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 ஆவணம் வாதி கம்பெனிக்கு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எனது டிரேடு மார்க் போன்று டியூப்ளிக்கேட் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**